# ஒடுக்குமுறையையும் தொடர்புற்ற தன்மையையும் (Intersectionality) ஆய்வு செய்தல்

**இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்**

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

## ஒடுக்குமுறை என்றால் என்ன?

ஒடுக்குமுறை என்பது நமது சமூகத்தில் உள்ள செயல்முறைகளும் அமைப்புகளும் நிறுவனங்களும் மற்றவர்களின் இழப்பில் ஒரு குழுவினர் அதிகாரத்தையும் செல்வாக்கையும் வளங்களையும் அதிகரித்த அளவில் பெற்றுக்கொள்ளும்[1] வகையில் கட்டமைக்கப்பட்டுள்ள தன்மையை குறிக்கின்றது.[1]

## ஒரு சமூகம் எவ்வாறு ஒடுக்குமுறையானதாகிறது?



ஒடுக்குமுறை என்பது கொடூரமாக, நியாயமற்று, அநீதியாக நடத்துவதை விபரிக்கிறது.[2]

ஒரு ஒடுக்குமுறைச் சமூகம்

- சில குழுவினர் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள், சிறந்தவர்கள் என்ற எண்ணத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்படுவது
- "ஏனைய குழுவினர் பயனடையும் வகையில், சில குழுவினரை வழக்கமாகவும் தீவிரமாகவும் பாகுபடுத்திக் காட்டுவது"[3]


1. The Icarus Project, 2015, p. 6
2. Collins English Dictionary, n.d.
3. National Museum of African American History & Culture, 2021

# ஒரு சமூகம் எவ்வாறு ஒடுக்குமுறையானதாகிறது?

சில குழுவினர் ஏனையோரை விட அதிகாரத்தையும் சிறப்புரிமைகளையும் தக்கவைத்துக்கொண்டு நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடிவது


- இது "மட்டுப்பாடுகள், பயன் குறைவுகள் அல்லது ஒப்புதல் அளிக்க மறுத்தல்"[4] உட்பட்ட பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் ஏற்றத்தாழ்வுகள் என பொருள்கொள்ளப்படுகிறது.[4]

**இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்**

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council
Toronto Chapter

Ontario



**பல ஆண்டுகளாக நமது சமூகத்தின் சட்டங்களில் மாற்றங்கள் ஏற்பட்டாலும், நமது சமூகம்  கட்டமைக்கப்பட்டுள்ள விதம் காரணமாக ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்து நீடிக்கின்றன.**


4. Ibid.

# தொடர்புற்ற தன்மை (Intersectionality) என்றால் என்ன?

**இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்**

தொடர்புற்ற தன்மை என்பது இனம், பாலியல்பு, வர்க்கம், பால்நிலை போன்ற பல்வேறு சமூகப் பிரிவுகள் அல்லது அடையாளங்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புற்று பாதகமான (சாதகமற்ற) அல்லது ஒடுக்குமுறையான அமைப்புகளை உருவாக்குகின்றன என்பதை விளக்குகிறது.

- நமது அடையாளத்தின் பகுதிகளை உருவாக்கும் இந்த சமூக வகைப்பாடுகளால் அனைத்து ஒடுக்குமுறைகளும்[6] எவ்வாறு ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன என்பதை விளக்குகிறது [5]



எங்கள் தனித்துவமான அடையாளங்கள் ஒடுக்குமுறையின் அனுபவங்களை உருவமைப்பதால், தொடர்புற்றதன்மை என்ற சொல் எவ்வளவு சிக்கலான ஒடுக்குமுறை (மற்றும் ஒடுக்குமுறையை விளிப்பது) என்பதை சிறப்பாகப் படம்பிடித்து காட்டுகிறது.

## Examples of social categories/identities



- Race
- Class
- Immigration status
- Gender
- Disability
- Sexual Orientation

5. Taylor, B., 2019

தொடர்புற்ற தன்மை -  இந்த சொல் 1989 ஆம் ஆண்டில் சட்ட அறிஞரான கறுப்பினப் பெண் Kimberlé Crenshaw-வினால் உருவாக்கப்பட்டது.

- கறுப்பினப் பெண்கள் பல ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்பதால், அமெரிக்க சமூகத்தில் எவ்வாறு அதிகரித்த போராட்டங்களை எதிர்கொண்டார்கள் என்புதை இந்தச் சொல் விபரித்தது. [6] [7]

இந்தச் சொல் இப்போது சமூகப் பிரிவுகள் மற்றும் ஒடுக்குமுறைகளின் சிக்கலான தன்மையை குறித்துக்காட்டினாலும் பல போராட்டங்களை ஆராய பரவலாக தற்போது பயன்படுத்தப்பட்டாலும், அதன் வேர்களை நினைவுகூர்வதும் அநீதிக்கு எதிராக போரிடும் போது ஒற்றுமையாக இருப்பதன் முக்கியத்துவத்தை நினைவில் கொள்வதும் அவசியமானது.

கனடாவில் பிறந்த சீன மாணவர் மற்றும் கனடாவில் பிறந்த ஒரு கறுப்பின மாணவர் இருவரும் தங்கள் இனத்தின் காரணமாக பாகுபாடு மற்றும் ஒடுக்குமுறையை எப்படி எதிர்கொள்வார்கள் என்பதை தொடர்புற்றதன்மை காட்டுகிறது, ஆனால் மாணவர்கள் இருவரும் எதிர்கொள்ளும் போராட்டங்களும் அடக்குமுறைகளும் தனித்துவமானவை என்பதை அங்கீகரிக்கிறது.

- நீதிக்காக தனியாகப் போராடுவதற்குப் பதிலாக, இருவரும் இணைந்து ஒருவர் மற்றவரை உயர்த்துவதும் இணைந்து போராடுவதும் முக்கியமானது.



6. National Museum of African American History & Culture, 2021

"ஒடுக்குமுறைக்கு படிநிலை (hierarchy) இல்லை"

- Audre Lorde, கறுப்பினப் பெண், தற்பால் உறவாளர், தாய், போராளி மற்றும் கவிஞர்

# இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

ஒடுக்குமுறையை புரிந்துகொள்வதன், ஆராய்வதன் நோக்கம் எந்த ஒடுக்குமுறை மற்றதை விட மோசமானது என தீர்மானிப்பதற்கும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் அல்ல

அதற்குப் பதிலாக, பால்வாதம், இனவாதம் மற்றும் வகுப்புவாதம் போன்ற பல்வேறு ஒடுக்குமுறை அமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு கருவியாக தொடர்புற்ற தன்மையை நாம் பயன்படுத்த வேண்டும்.

- கொள்கைகள், வரவு செலவு கணக்குகள், ஆய்வுகள் போன்றவற்றை பகுப்பாய்வு செய்யும் போது நாம் தொடர்புற்றதன்மையை பயன்படுத்தி அதனை செய்யலாம்.

உதாரணமாக, பல்வேறு தொழிலாளர் சட்டப் பாதுகாப்புகளை ஆராயும்போது, இனம், வர்க்கம், மொழித் திறன் மற்றும் குடியேற்ற நிலை போன்ற சமூகப் பிரிவுகள் நியாயமான பாதுகாப்பான வேலைவாய்ப்புகளைப் பெறும் ஒரு நபரின் திறனில் எத்தகைய தாக்கத்தை செலுத்தும் என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம்.

# இவ்விடயங்களைப் பற்றி சிந்திப்பது ஏன் முக்கியமானது?

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

Tamil Canadian Centre for Civic Action

Chinese Canadian National Council Toronto Chapter


Ontario

நமது பாலினம் போன்ற நமது சமூக அடையாளத்தின் ஒரு பகுதியிலிருந்து நாம் ஒடுக்குமுறையை அனுபவிக்காவிட்டாலும், அந்த ஒடுக்குமுறை அமைப்புகளை அங்கீகரிப்பதன் மூலம் சமூகப் பிரிவுகள் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆராய்வது முக்கியம்:

- வெவ்வேறு அடையாளங்களின் அடிப்படையில் அவர்களை பாதிக்கும்ஒ
- ன்றுடன் ஒன்றை இணைத்து, மேலும் சிக்கல் தன்மை கொண்ட வலையமைப்புகளை உருவாக்க முடியும்

**அனைவருக்குமான மிகுந்த நியாயமான சமுதாயத்தை உருவாக்க சமத்துவமின்மையை நாம் சிறப்பாகக் கையாள முடியும்**

சமத்துவமின்மையை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பதை யோசிக்கும்போது, தொடர்புற்ற தன்மை எனும் கண்ணாடியை பாவிப்பது அவசியம்



**உதாரணமாக, ஊதிய இடைவெளியை (வெவ்வேறு குழுக்களுக்கு இடையேயான சராசரி ஊதியத்தில் உள்ள வேறுபாடு) ஆராயும் போது, ஊதியத்தில் உள்ள வேறுபாடு பால்நிலை மற்றும் இன (மற்றும் பிற சமூக அடையாளங்கள்) அடிப்படையில் மாறுபடலாம் என்பது தெளிவாகிறது.**

- உதாரணமாக, "அமெரிக்காவில், ஒரு ஆண் சம்பாதிக்கும் ஒவ்வொரு டொலருக்கும் பெண்கள் 83 சதங்களை சம்பாதிக்கிறார்கள் [7]

- இருப்பினும், இனத்தை கருத்தில் கொள்ளும்போது, கறுப்பினப் பெண்கள் "ஒரு வெள்ளைக்கார ஆண் சம்பாதிக்கும் ஒவ்வொரு டொலருக்கும் 64 சதங்களை" சம்பாதிக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. [8]




7. El Gharib, S., 2022
8. Ibid.

# நமது சமூகங்களில் ஒடுக்குமுறையை விளித்தல்

ஒடுக்குமுறை சிலரது அதிகாரத்தையும் சிறப்புரிமையையும் தக்கவைக்கும் அதே வேளையில், மற்றவர்களுக்குப் பாதகமாக அமையும் என்பதை அங்கீகரித்து ஒப்புக்கொள்வதன் மூலம் மாற்றத்தையும் நீதியையும் உருவாக்குவதற்கு நாம் உழைக்க முடியும்.

## இவற்றைச் செய்வது முக்கியமானது

- கற்பதைத் தொடர்வது
  - உங்களுக்குள்ள சிறப்புரிமைகளையும் அதிகாரத்தையும் பற்றி சிந்திப்பது
  - இந்த கல்விச் செயல்பாட்டில் மற்றவர்களிடம் கேட்பதும் அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்வதும் அடங்கும், அதே நேரத்தில் உங்கள் சொந்த நேரத்தில் கற்றுக்கொள்வதற்கு முன்முயற்சி எடுப்பது
- நீதிக்கான சமூக இயக்கங்களில் சேர்வது
  - நீங்கள் சமூகத்தில் அதிக சலுகையும் அதிகாரமும் கொண்டவராக இருந்தால், மற்றவர்களுடன் ஒருமைப்பட்டு நிற்கத் துணிவது
- உங்களின் அன்றாட வாழ்வில் இடம்பெறும் சமத்துவமின்மை சம்பவங்களையும் பாகுபாடுகளையும் எதிர்கொள்வது



**இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்**

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council
Toronto Chapter

Ontario

# What else can I do?


இனவெறி
மற்றும்
வெறுப்புக்கு
எதிரான
ஆசியர்கள்

Stay in touch with CCNCTO through **WeChat** or follow us on Instagram **@CCNCTO**

Check out the our most recent **2021 anti-Asian racism report** and our **Frontline Workers Pandemic report**

Chinese Canadian National Council
Toronto Chapter

Ontario




Fill in **this form** to join our volunteer team and support our various organizing, anti-racism & equity work

- **Talk** to others in your social circles about racism
- **Call out** all levels of racism
- **Share** this information with others
- **Engage** with local community members and organizations to advocate for change



## Check out these Ontario-based community organizations that prioritize intersectionality and social justice on Instagram!

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

- **Agincourt Community Services Association (ACSA)** **@acsatoronto** an organization addressing the needs of Scarborough by empowering children, youth, newcomers, homeless & underserved communities
- **(AQUA) Asian Queer Alliance** **@asianqueeralliance** an organization serving queer Asians of marginalized genders in Tkaronto
- **The Council of Agencies Serving South Asians (CASSA)** **@cassaonline** an umbrella organization supporting and advocating for the needs of the Canadian South Asian community
- **Friends of Chinatown Toronto** **@friendsofchinatownto** an organization fighting for housing justice, racial justice, and economic justice in Toronto's downtown
- **Migrant Rights Network** **@migrantrightsca** a cross-Canada alliance to combat racism and fight for migrant justice
- **The National Council of Canadian Muslims (NCCM)** **@nccm_community** an organization that protects Canadian human rights and civil liberties, challenges discrimination and Islamophobia, builds mutual understanding, and advocates for the public concerns of Canadian Muslims
- **On Canada Project** **@oncanadaproject** a community digital media platform that centers marginalized experiences while writing about system inequities and issues facing our country and the world
- **Platform** **@platform_ca** an organization focused on civic leadership for young Black, Indigenous, and racialized women and gender-diverse people
- **Tamil Canadian Centre for Civic Action (TCCCA)** **@tamilcivicaction** an organization working towards the success of all Tamil Canadians in the social, political, economic and cultural spheres of Canada
- **Urban Alliance on Race Relations** **@uarrcanada** an organization that provides educational programs & research, critical in addressing racism in society

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

# Works Cited

Collins English Dictionary (n.d.). Oppressive. Retrieved from https://www.collinsdictionary.com/dictionary/english/oppressive

El Gharib, S. (2022). What is Intersectionality and Why Is It Important? Retrieved from https://www.globalcitizen.org/en/content/what-is-intersectionality-explained/

The Icarus Project (2015). Madness & Oppression: Paths to Personal Transformation & Collective Liberation. (1st ed.). Retrieved from https://fireweedcollective.org/wp-content/uploads/2018/11/MadnessAndOppressionGuide.pdf

National Museum of African American History and Culture (2021). Social Identities and Systems of Oppression. Retrieved from https://nmaahc.si.edu/learn/talking-about-race/topics/social-identities-and-systems-oppression

Taylor, B. (2019). Intersectionality 101: What is It And Why Is It Important? Retrieved from https://www.womankind.org.uk/intersectionality-101-what-is-it-and-why-is-it-important/

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

Tamil Canadian Centre for Civic Action

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario